1970 நவம்பர் 27]

திருப்பூர் கோவில்களில் அர்ச்சனைச் சீட்டு முறை

* 37 வினா—திரு. கே. சகாதேவ கண்டர் : மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரிலுள்ள ஸ்ரீ விச்வேச்வரஸ்வாமி கோவிலிலும் வீரராகவப் பெருமாள் கோவிலிலும் அர்ச்சனைச் சீட்டு வாங்கும் முறை நீக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) & (இ) இல்லை ஐயா, இது நீதி மன்ற விசாரணையில் உள்ளது.

Registration at residence of parties

* 38 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the Sub-Registrar/District Registrar is allowed to go on personal attendance to parties for registration during working hours or out of office hours on collection of a fee of Rs. 20; and

(b) the quantum or portion of this personal attendance fee of Rs. 20 paid to the Registering Officer?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) பத்திரப்பதிவுத்துறை உதவிப் பதிவாளரும் மாவட்டப் பதிவாளரும் பொதுவாக அலுவலக நேரத்திற்குப் பிறகு நேரிற் சென்று பதிவு செய்ய அனுமதிக்கப் படுவர். அவசரமாகப் பதிவு செய்யப்படவேண்டிய நேர்வுகளில், அலுவலக நேரத்திலும் இவ்வாறாக நேரிற் சென்று பதிவு செய்யலாம். அலுவலக நேரங்களில் வெளியில் சென்று பத்திரங்களைப் பதிவு செய்யவேண்டிய அவசியம் நேர்ந்தால் பத்திரப்பதிவு அதிகாரி அலுவலக உதவியாளரையோ, எழுத்தரையோ தமக்குப் பதிலாக நேரிற்சென்று பதிவு செய்யும்படி கமிஷன் கட்டளையொன்றைப் பிறப் பிக்கலாம். நேரிற் பதிவு செய்தல் ஒரு ஆணுக்காயின் ரூ. 25-ம் பெண்ணிற்காயின் ரூ. 20-ம் கட்டணம் விதிக்கப்படும்.

(இ) இவ்வாறு நேரிற் சென்று பத்திரங்களைப் பதிவு செய் வதற்காக பத்திரப் பதிவு அதிகாரிக்கு பயணப்படி அனுமதிக்கப்படு வதால் இக்கட்டணத்தில் ஒரு பகுதிகூட அவர்களுக்குத் தரப்படுவ தில்லை.